## தொல்பொருளியல் பட்டபின்படிப்பு நிறுவகம் - 2018

---

### 1.1 அபிப்பிராயம்

தொல்பொருளியல் பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

----------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 32,927,417 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளிற்கு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 102, 103, 104 மற்றும் 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய 2004/புஸ/1 ஆம் இலக்க (2016 – திருத்தப்பட்ட) தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் சுற்றறிக்கை | நூலகப் புத்தகங்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது காணாமல் போனதாக வெளிப்படுத்தப்பட்ட 216 புத்தகங்கள் மற்றும் 588 வெளியீடுகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை நடாத்தப்பட்டு அத் தீர்மானங்கள் மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் காணாமல் போனமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) நிதிப் பிரமாணம் 756 | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் பொருளிருப்பு பொருட்கள் மீது பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையானது அங்கீகரிக்கப்பட்டதும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | பொருள் மெய்மையாய்வு வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அறிக்கை உரிய காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 2014/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் (iii) ஆம் பிரிவு | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரிற்கான ஆராய்ச்சிப் படிக் கொடுப்பனவிற்காக இடைக்கால ஆராய்ச்சி அறிக்கையானது ஆராய்ச்சி ஆரம்பித்ததிலிருந்து 6 மாதங்களினுள் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அவற்றின் செயன்முன்னேற்றத்துடன் திருப்தியடைந்தால் மாத்திரமே ஆராய்ச்சிப் படிக் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட முடியும். எனினும் ரூபா 3,280,477 கூட்டுமொத்தமான ஆராய்ச்சிப் படிகள் 2018 ஆம் ஆண்டின் போது கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் 12 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன. | இடைக்கால ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்படாத குறைபாடு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆராய்ச்சிகளின் பெறுபேற்றுச் செயன்முறையை அறிக்கையிடுதல் தொடர்பாக முறையான நடைமுறையொன்று எதிர்காலத்தில் பின்பற்றப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,567,328 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,893,052 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 674,276 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இவ் வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தின் வளாகத்தில் ''தேசிய நம்பிக்கைப்பொறுப்பு'' பெயரிலான தனியார் கம்பனியொன்றிற்குச் சொந்தமான அலுவலகமொன்று பேணப்படுகின்றதுடன் ஐசீஓஎம்ஏஎஸ்எஸ் பெயரிலான தனியார் நிறுவகமொன்றிற்கு அதன் அலுவலக முகவரியாக நிறுவகத்தின் முகவரி பயன்படுத்தப்படுகின்றதுடன் அதன் கூட்டங்களை நடாத்துவதற்கு நிறுவகத்தின் கேட்போர்கூடம் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் நிறுவகத்தின் கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களை பயன்படுத்துதல் தொடர்பான முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் அல்லது ஏதாவது புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் தனியார் நிறுவனங்களுடன் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | நூலகங்களிற்குரிய ரூபா 21,922,822 கிரயமான நூலகப் புத்தகங்களை நிறுவகத்தில் கல்விகற்கும் கல்வியாளர்களால் பயன்படுத்தப்படுவதற்கு மாத்திரம் இடமளிக்கப்பட்டிருந்த போதிலும் புத்தகங்களை வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லை. | வளங்களை பயன்படுத்துவதற்கான பாதுகாப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் நூலகத்தை பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்படும். | நூலகத்தின் அதி உத்தம பயன்பாட்டிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) நிறுவகத்தால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற 07 பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளிற்காக 100 கல்வியாளர்களை விடக் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவர்களில் 50 சதவீதத்திற்கு குறைவானவர்கள் மாத்திரமே கற்கைநெறிகளை பூர்த்திசெய்திருந்தனர். | மாணவர்களை தக்கவைத்துக் கொள்வதற்காக கவர்ச்சிகரமான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும். | கல்வியாளர்களை சேர்த்துக்கொள்ளல் மற்றும் அவர்கள் கற்கைநெறிகளை பூர்த்திசெய்வதற்காக ஊக்குவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) முன்னைய 05 ஆண்டுகளின் போது தத்துவவியல் முதுமானி (Master of Philosophy) மற்றும் தத்துவவியல் கலாநிதி (Doctor of Philosophy) கற்கைநெறிகளிற்காக முறையே 26 மற்றும் 35 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவர்களில் ஒருவரும் பட்டப்பின் படிப்பு பட்டத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும் முன்னைய 05 ஆண்டுகளின் போது கலை (ஆராய்ச்சி) முதுமானி கற்கைநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட 33 பேரில் ஒருவர் மாத்திரம் கற்கைநெறியை பூர்த்தி செய்திருந்தார். ஒரு ஆண்டு கால கலை முதுமானி மற்றும் விஞ்ஞான முதுமானி கற்கைநெறிகளிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட 76 மாணவர்களில் 02 பேர் மாத்திரம் கற்கைநெறிகளை பூர்த்தி செய்திருந்தனர். ஒரு ஆண்டு கால 02 பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கைநெறிகளிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட 242 பேரில் 58 சதவீதத்திற்குச் சமமான 142 பேர் மாத்திரம் கற்கைநெறிகளை பூர்த்தி செய்திருந்தனர். இதனால் பட்டப்பின் படிப்புக் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களின் சதவீதம் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. | | |
| (இ) நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. ஒரு வருட கால கலை முதுமானி மற்றும் விஞ்ஞான முதுமானிக் | நிறுவகத்தின் உள்ளகச் சிக்கல்கள் காரணமாக இது ஏற்பட்டிருந்தது. பெறுபேறுகளை தாமதமின்றி வெளியிடுவதற்கான | ஆகக்குறைந்த காலப்பகுதியினுள் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கற்கைநெறிகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 09 மாத காலப்பகுதி எடுத்திருந்தது. | முறைமையொன்று எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும். | |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறுவகத்தின் விரிவுரையாளர்களின் கீழ் சேவையாற்றும் ஏழு ஆராய்ச்சி உதவியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு வெளியே முகாமைத்துவ சபையின் தீர்மானங்களின் அடிப்படையில் ஆராய்ச்சிகளிற்கு பங்களித்திருந்தனர். அதில் 5 பேர் 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக நிறுவகத்தில் கற்கைநெறிகளை தொடரும் கல்வியாளர்கள் நிறுவகத்தின் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் கீழ் ஆராய்ச்சி உதவியாளர்களாக ஆராய்ச்சிகளில் ஈடுபடும் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டிருந்தன. | முகாமைத்துவ சபையின் பரிந்துரைகளிற்கு இணங்க செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஆராய்ச்சி உதவியாளர்களின் நியமனங்கள் முறைமைப்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தில் சிரேஷ்ட உதவி நூலகரின் பதவி 2017 திசெம்பர் 22 தொடக்கம் ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக வெற்றிடமாக காணப்பட்டது. எனினும் அவ் வெற்றிடம் 2018 ஏப்ரல் 30 வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக 22 செயற்பாடுகளை உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து 14 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 40 சதவீதம் அல்லது அதற்கு குறைவாகவே காணப்பட்டது. | நிறுவகத்தின் புதிய பணிப்பாளரின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடும் போது 02 வருமான விடயங்கள் மற்றும் 23 செலவின விடயங்களில் 50 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்திலுள்ள சிக்கல்கள் காரணமாக பாதீட்டுத் திட்டங்கள் அடையப்பட முடியாதிருந்தன. | பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' என்பவற்றின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் செயற்பட வேண்டும். அதன் பிரகாரம் நிறுவகத்தினால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பான இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவற்றை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |